செ.வெ.எண்.65 நாள்:01.03.2021

நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 நடைபெறுவதை முன்னிட்டு, 30 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் /மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (01.03.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் /மாவட்ட தேர்தல் அலுவலா திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் ஒரேகட்டமாக தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பினை 26.02.2021 அன்று வெளியிட்ட உடன், தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தது. இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளபடி, 24 மணி நேரம், 48 மணி நேரம் மற்றும் 72 மணி நேரத்தில் விளம்பரங்களை நீக்குவது தொடர்பாகவும், தேர்தல் நடத்தை விதிமுறைகள் பின்பற்றுவது தொடர்பாக அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடன், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுடன் 27.02.2021 அன்று ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு, விதிமுறைகளை பின்பற்றுவது தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டது.

நமது மாவட்டத்தை பொறுத்தவரை, உதகமண்டலம், கூடலூர் மற்றும் குன்னூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் மீறப்படுகிறதா என்பதனை கண்காணிக்க 9 பறக்கும் படை குழுவினர் (FLYING SQUAD TEAM), 9 நிலையான கண்காணிப்பு குழுவினர் (STATIC SURVEILLANCE TEAM), 3 VST (VIDEO SURVEILLANCE TEAM ) குழுவினர், 3 VVT ( VIDEO VIEWING TEAM) குழுவினர், 3 தேர்தல் செலவின கண்காணிப்பு குழுவினர் (ACCOUNTING TEAM) மற்றும் 3 தேர்தல் நடத்தை விதிமுறைகள்

கண்காணிப்பு குழுவினர் (MODEL CODE OF CONDUCT TEAM) என மொத்தம் 30 குழுக்கள் களத்தில் உள்ளனர்.

இதுவரையில் ரூ.20,73,800/- பணம் மற்றும் ரூ.3.30 இலட்சம் மதிப்பில் பரிசு பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்கள் தேர்தல் நடத்தை விதிமுறைகள் மீறுவது தொடர்பாக 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறையில் புகார்களை தெரிவிக்கலாம். மேலும், ”சி விஜில்” என்ற ஆப் மூலமாகவும் பொதுமக்கள் புகார்களை தெரிவிக்கலாம். நமது மாவட்டத்தில் 683 வாக்குசாவடிகளிலிருந்து தற்போது 868 வாக்குசாவடிகளாக உயர்ந்துள்ளது. நமது மாவட்டத்தில் மொத்தம் 4,167 நபர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஒரு வாக்குசாவடிக்கு 1 நபர் தெர்மல் ஸ்கேன் செய்யவும், 1 நபர் கையுறை மற்றும் சேனிடைசர் வழங்குவதற்காகவும் வாக்குசாவடி நிலை அலுவலர்கள் மற்றும் சுகாதாரத்துறை பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்திலுள்ள 868 வாக்குசாவடிகளில் 112 வாக்குச்சாவடிகள் பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், தேர்தல் பணியில் ஈடுபட உள்ள 4,167 நபர்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் 2,600 பள்ளி ஆசிரியர்கள் மற்றும் 250 கல்லூரி பேராசிரியர்களும் உள்ளனர். இவர்களுக்கு முன்னுரிமை அளித்து இந்த வாரத்திற்குள் கொரோனா தடுப்பூசி செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதே போல் தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தடுப்பூசி செலுத்திய நபர்களும் இரண்டாம் கட்டமாக தடுப்பூசி செலுத்துவதற்கு போதுமான அளவில் தடுப்பூசி மருந்துகள் உள்ளது. கொரோனா தடுப்பூசி 15 மையங்கள் மற்றும் 7 தனியார் நர்சிங் ஹோம் ஆகிய இடங்களில் தேவையான அளவு தடுப்பூசிகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் இன்று முதல் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மாவட்ட கண்காணிப்பு அலுவலருடன் இணைந்து பதற்றமான வாக்குசாவடிகளை கண்காணிக்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இந்த வாக்குச்சாவடிகளில் வெப்கேமரா மூலமும் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 24 வீடியோ பதிவாளர்கள் மூலம் தேர்தல் நடத்தை விதிமுறைகளை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.